# “கிறிஸ்துவின் திருப்பணி வாழ்வின் முழுமையின் விளக்கம்”

*(Christ’s Ministry is an exposition of Fullness of life)*

**பூபாலன் தேவராசா**

யாழ். ஆதீனம்
தென்னிந்திய திருச்சபை
வட்டுக்கோட்டை
**2013**

# கிறிஸ்துவின் திருப்பணி வாழ்வின் முழுமையின் விளக்கம்

ஆதிப் பெற்றோராகிய ஆதாமும் ஏவாளும் கடவுளுடைய கட்டளையை மீறி செயற்பட்டதால் பாவத்திற்குள் விழுந்து போனார்கள். அவ்விதம் பாவம் செய்தவர்களைக் கடவுள் தண்டித்த போதிலும், அவர்களை மீட்பதற்கான வாக்குறுதியை அவர்களுக்குக் கொடுத்தார். (தொட. நூல். 3:15) ஒரு மீட்பரை அனுப்பப் போவதாக வாக்குறுதியளித்தார். அதற்கமைய அவர் காலம் நிறைவேறினபொழுது தமது ஒரே பேறான மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார். (யோவான் 3:16)

மனுவுருவான வார்த்தையான அவரில்தான் மனிதனின் மறைபொருள் உண்மையாகவே விளக்கம் பெறுகிறது. ஏனெனில், முதல் மனிதனாகிய ஆதாம், வரவிருந்த ஆண்டவர் கிறிஸ்துவின் ஒரு முன்னடையாளமாக இருந்தான். புதிய ஆதாமாகிய கிறிஸ்து தந்தையுடையவும், அவருடைய அன்பினுடையவும் மறைபொருளை வெளியிடுவதன் வழியாக மனிதனை மனிதனுக்கே முழுவதும் வெளிப்படுத்தி அவனுடைய உன்னத அழைப்பை அவனுக்கு தெளிவுபடுத்தியிருக்கிறார். "கட்புலனாகாத கடவுளது சாயலான" (கொலோ 1:15) இவரே நிறைவுபெற்ற மனிதன் ஆவார். முதல் பாவத்தினால் சீரழிக்கப்பட்ட, உருக்குலையப்பெற்ற தெய்வீக சாயலை, ஆதாமின் மக்களுக்கு அவர் மீண்டும் தந்திருக்கிறார். அவர் மனித இயல்பை உருக்குலைய்க்காது ஏற்றுக்கொண்டதால், அவ்வியல்பு மனிதனிலும் கூட மேன்மைமிகு நிலைக்கு உயர்த்தப் பெற்றுள்ளது. ஏனெனில், இறைமகன் தம்முடைய மனுவுருவேற்பினால் ஒவ்வொரு மனிதனோடும் ஒருவகையில் தம்மை ஒன்றிக்கச் செய்துள்ளார். அவர் மனித கைகளால் வேலைசெய்தார். மனித அறிவால் சிந்தனை செய்தார். மனித மனத்தில் செயற்பட்டார். மனித இதயத்தால் அன்பு செய்தார். கன்னி மரியாளிடமிருந்து பிறந்து உண்மையில் நம்முள் ஒருவரானார்.

மாசற்ற செம்மறியான அவர் தன்னுரிமையோடு தம்முடைய இரத்தத்தைச் சிந்தி எமக்கு வாழ்வைப் பெற்றுத்தந்தார். அவர் வழியே கடவுள் நம்மைத் தம்மோடும் தமக்குள்ளும் மறுவுறவாக்கியுள்ளார். அலகையினுடையவும், பாவத்தினுடையவும் அடிமைத்தளையினின்று நம்மை விடுவித்தார். இதனால் "இறைமகன் என்மீது அன்புகூர்ந்து எனக்காகத் தம்மையே ஒப்புவித்தார்." (கலாத் 2:20) என்று கூறும் புனித பவுலடியாரோடு நாம் ஒவ்வொருவரும் கூறமுடியும். நமக்காகப் பாடுபட்டு, நாம் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்ற முன்மாதிரி காட்டியதோடு நில்லாமல், வழியையும் செம்மைப்படுத்தித் தந்துள்ளார். இப்பாதையைப் பின்பற்றும்போது எமது வாழ்வும் சாவும் புனிதமாக்கப்பட்டு ஒரு புதிய விளக்கம் பெறுகின்றன. அந்தவகையில் இயேசுகிறிஸ்துவின் திருப்பணி எவ்விதம் வாழ்வின் முழுமையின் விளக்கமாக அமைகின்றது என்பதனை இங்கு நோக்குவோம்.

# நாசரேத்தூர் இயேசுவின் ஆளுமை

நாசரேத்தூர் இயேசு ஒரு பெரும் ஆன்மீகத் தலைவர் என்றவகையில் மனித வாழ்வின் தன்மையும் தாற்பரியமும் குறித்த ஓர் ஆழ்ந்த உள்நோக்கை வழங்கினார். கிறிஸ்தவ விசுவாசத்தின் உட்பொருளை இந்த உள்நோக்கானது கிறிஸ்தவம் குறிப்பிட்ட காலத்திலும் இடத்திலும் மேற்கொள்ளும் எந்த ஓர் அமைப்பு முறையிலும் பார்க்க அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை இயேசு பரமதிரித்துவத்தினுடைய இரண்டாவது நபராவார். இவர் இரண்டு அத்தங்களின் அதாவது, கடவுளும் மனிதனும், படைத்தவரும் படைப்புப் பொருளும் இணைந்த ஐக்கியமாவார். அவர் பூரண மனிதனும் பூரண இறைவனும் ஆவார். புதிய ஏற்பாட்டிலுள்ள அனைத்து நூல்களும் இயேசு பூரண மனிதனும், பூரண இறைவனுமாக இருந்தார் என்பதனை வலியுறுத்துகின்றன.

## இயேசுவின் தெய்வீக ஆளுமை

இயேசுகிறிஸ்துவின் திருப்பணி வாழ்வின் முழுமையின் விளக்கமாக அமைவதற்கு அவரது தெய்வீக ஆளுமை மிக முக்கியத்துவம் உடையதாக விளங்குகின்றது. அவர் தமது தெய்வீக ஆளுமையின் மூலம் மனித வாழ்வினை முழுமையாக விளக்கம் பெறச் செய்கின்றார் எனில் அது மிகையல்ல.

புதிய ஏற்பாட்டிலுள்ள நூல்களுள் யோவான் எழுதிய நற்செய்தி நூல் இயேசுகிறிஸ்துவின் மனித ஆளுமையையும் தெய்வீக ஆளுமையையும் சிறப்பாக வெளிப்படுத்தி நிற்கின்றது. யோவான், நற்செய்தியை எழுதிய காலத்தில் நொஸ்டிக்க சிந்தனை கிறிஸ்தவத்தின் மீது தாக்கம் செலுத்தியிருந்தது. நொஸ்டிக்க சிந்தனையாளர்கள் "ஆவியுலகு, சடப்பொருள் உலகு என இரு உலகுகள் உள்ளன. ஆவியுலகு நல்லது. சடப்பொருள் உலகு தீயது. கடவுள் நல்லவராக இருப்பதனால் அவர் ஆவியுலகிலேயே இருக்கிறார். நல்லவராகிய கடவுள் தீயதாகிய இந்த சடப்பொருள் உலகைப் படைத்திருக்க முடியாது. கடவுளிடமிருந்து புறப்பட்ட பல்வேறு சக்திகளுள் ஒன்று தொலைதூரம் சென்று வேறு தீயசக்திகளோடு சேர்ந்து இவ்வுலகைப் படைத்தது. அதாவது இவ்வுலகம் உபகடவுளால் படைக்கப்பட்டது. இதனடிப்படையில் இயேசு கிறிஸ்து, உண்மையான கடவுளாக இருக்கமுடியாது. ஏனெனில், நல்ல கடவுள் தீயதாகிய மனித உடலை எடுக்க முடியாது. எனவே அவர் கடவுளிடமிருந்து புறப்பட்ட சக்திகளுள் ஒன்று, படைக்கப்பட்டவர்" என தமது கொள்கைகளை எடுத்துக்கூறி, இயேசுவின் தெய்வீகத் தன்மையை மறுத்தனர்.

இதற்கு எதிராக யோவான் இயேசுவின் இரு ஆளுமைகளையும் அதாவது, இறை ஆளுமை, மனித ஆளுமை ஆகிய இரு ஆளுமைகளையும் வலியுறுத்திக் கூறுகின்றார். குறிப்பாக, யோவான் 1ம் அதிகாரத்திலேயே நாம் இதனைக் காணமுடியும். இங்கு இயேசு கிறிஸ்துவை "வார்த்தை" என்ற பதத்தினைப் பயன்படுத்தி அறிமுகப்படுத்துகின்றார். "தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது" (யோவா 1:1) என்று கூறி இயேசுவின் தெய்வீக ஆளுமையை

வலியுறுத்துகின்றார். உலகம் தோன்றுவதற்கு முன்னமே இயேசு இருந்தார் எனக் காண்பித்து "இயேசுவின் உலக முன்னிருத்தலை" யோவான் வலியுறுத்துகின்றார். அதுமட்டுமல்ல, "அனைத்தும் அவரால் உண்டாயின. உண்டானது எதுவும் அவரால் அன்றி உண்டாகவில்லை" (யோவான் 1:3) எனக்கூறி இயேசு படைக்கப்பட்ட படைப்பு அல்ல, அவர் படைப்பாளர் எனவும் தெளிவுபடுத்துகின்றார்.

கிறிஸ்துவின் தெய்வீக ஆளுமையை யோவான் நற்செய்தியாளர் மட்டுமல்ல, புதிய ஏற்பாட்டின் ஏனைய நூலாசிரியர்களும் வெளிப்படுத்தி இருக்கின்றனர். குறிப்பாக, அவரது தெய்வீகத்தை அடிக்கடி அறிக்கையிடும்போது, சிலவேளைகளில் கிறிஸ்துவாலே அவை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. பேதுரு கிறிஸ்துவை "உயிருள்ள கடவுளின் மகன்" என அறிக்கையிடுகின்றார். (மாற்கு 8:29, மத் 16:16) பவுலடியார், "கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை பற்றிக்கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை" (பிலி. 2:6) எனக் கூறுகின்றார். தலைமைக்குரு கயபா, "நீர் கடவுளின் மகனான கிறிஸ்துவா" எனக் கேட்டபோது, "நீரே சொல்லிவிட்டீர்" (மத் 26:64, மாற். 15:2) என ஏற்றுக்கொள்ளுகின்றார். அவரது தெய்வீகத் தன்மையை உணர்ந்தமையால் தான் நோயாளிகளைக் குணமாக்கிப் பாவங்களை மன்னிக்கின்றார். (மாற்கு 2:5 - 11, மத் 9:2, லூக். 5:20 - 22) இவையனைத்தும் இயேசுக் கிறிஸ்துவின் கடவுள்/ தெய்வீக ஆளுமையை வெளிப்படுத்துபவையாக அமைகின்றன.

## கிறிஸ்துவின் மனித ஆளுமை

புதிய ஏற்பாடு இயேசுகிறிஸ்துவின் தெய்வீக ஆளுமையை எந்தளவிற்கு வலியுறுத்திக் கூறியதோ, அந்தளவிற்கு அவரது மனிதத் தன்மையையும் வலியுறுத்திக் கூறுகிறது. என்றென்றும் வாழும் கடவுளின் மகன் மனிதர்களைப் போல மனிதவடிவில் தோன்றினார். (பிலி. 2:7 - 8) அவரே மனிதன் இயேசு கிறிஸ்து. (1 தீமோத். 2:5) மனிதர்களோடு தமது உடலையும் இரத்தத்தையும் பகிர்ந்துகொண்டார். (எபேசி. 2:14) எனவே மனிதத்தன்மைகள் எதுவும் அவருக்குப் புறம்பானதல்ல. மனிதர்களோடு மனிதனாக வாழ்ந்து மகிழ்ச்சி, துன்பங்கள் அனைத்தையும் பகிர்ந்துகொண்டார். அவர் வெறும் மனிதனாக மட்டும் தோற்றமளிக்கவில்லை, இயல்பிலும் மனிதனாக இருந்தார். எல்லா மனிதர்களையும் போலவே ஆதாமின் வழியில் பிறந்தார். (லூக் 3.38) பெண்ணிடம் பிறந்தவராகவும் இருந்தார். (லூக் 2:6-7, மத் 1:18) அவர் உலகில் பாவ உடலை எடுத்துவந்த போதிலும் (உரோ. 8:3) பாவத்திற்கு அடிமையாகவில்லை. எபிரேய திருமுக ஆசிரியரின் கூற்றுக்கமைய அவர் எல்லாவகையிலும் சோதனைக்குள்ளானார். ஆனால் இறுதிவரை பாவமற்றவராகவே வாழ்ந்தார். (எபி.4:15) அதாவது, கிறிஸ்து புனிதமான, குற்றம் சாட்டப்படமுடியாத பாவிகளிடமிருந்து பிரிக்கப்பட்ட தலைமைக்குரு ஆவார். (எபி.7:26)

யோவான் நற்செய்தி நூலாசிரியரும் எந்தளவிற்கு இயேசுவின் தெய்வீக ஆளுமையை வலியுறுத்திக் கூறினாரோ, அந்தளவிற்கு இயேசுவின் மனித ஆளுமையையும் வலியுறுத்திக் கூறியுள்ளார். உதாரணமாக, இயேசு கானாவூர் திருமண வீட்டிற்குச் சென்றார். (யோவா. 2:12) தாகமாயிருந்தமையினால் குடிப்பதற்கு தண்ணீர் கேட்டார். (4:8) சிலுவையில் தொங்கிய வேளை தாகமாயிருக்கிறேன் (19:28) என்றார். லாசருவின்

வீட்டிற்குச் சென்றபோது கண்ணீர் விட்டு அழுதார். (11:35) அவர் தாம் வார்த்தை மனுவுருவெடுத்து நம்மிடையே குடிகொண்டார். (யோவா. 1:14)

# இயேசுகிறிஸ்துவின் திருப்பணி பற்றிய பிரகடனம்

இப்புவலகத்திற்கு பூரண மனிதனாகவும், பூரண இறைவனாகவும் வந்துதித்த இயேசுகிறிஸ்து, மனிதனை, பாவத்திலிருந்து மீட்டு, விடுதலை கொடுத்து, இறைவனது அரசை நிலைநாட்டுவதனை தமது பாரிய பொறுப்பாகக் கொண்டார். (மாற்கு. 1:15) அதுமட்டுமல்ல, தமது பணியைச் செய்ய ஆரம்பிக்கும் போது, தமது திருப்பணிபற்றிய விளக்கத்தையும், நாசரேத்தூர் செபக்கூடத்தில் ஏசாயா இறைவாக்குப் புத்தகத்தின் பகுதியை வாசித்தபோது தெளிவுபடுத்தினார். அங்கு தமது திருப்பணி எத்தகையது என்பதை இயேசு எடுத்துக்காட்டினார்.

இதன்படி அவர் முழு மனிதவிடுதலையைக் கொடுக்க வந்தவர் என நாம் புரிந்து கொள்ள முடியும். (லூக்கா 4:16-20, எசாயா. 61:1-3). இயேசு கிறிஸ்துவின் திருப்பணி வாழ்வின் முழுமையின் விளக்கம் முழு மனிதவிடுதலையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. முழுமனித விடுதலை என்பது வெறும் பாவ அடிமைத்தனத்திலிருந்து ஒரு ஆன்மீக விடுதலை கொடுப்பதனை மட்டும் குறிப்பிடுவதில்லை. மாறாக, அனைத்து அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை கொடுப்பதனைக் குறித்து நிற்கிறது. அனைத்து அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை பெறுகின்ற போது வாழ்வின் முழுமை விளக்கம் பெறுகிறது. இந்தவகையில் இயேசுவின் திருப்பணியையும் அவர் கொடுத்த விடுதலையையும் ஆராய்வோம்.

## இயேசுவும் தனிமனித விடுதலையும்

முழுமனித விடுதலை கொடுக்கவந்த இயேசுகிறிஸ்து ஒவ்வொரு தனிமனிதனுக்கும் விடுதலை கொடுக்க முயன்றார். அவர் தம்முடைய திருப்பணியில் தனிமனிதனுக்கு விடுதலை கொடுக்கும் பணியை மேற்கொண்டார். தனிமனித விடுதலை என்பது மனிதர் உண்மையாகவும், சிறந்தவர்களாகவும் இருப்பதற்கு தமக்குள்ள இயல்பான ஆவலால் அடையப்பெறுவதாகும். அதேவேளை தனிமனித விடுதலை ஒருவரது சொந்த வளர்ச்சியை வரையறை செய்கிற தடைகளிலிருந்து விடுவிக்கப்படுவதையும் குறிப்பாகப் புலப்படுத்தும். ஒருவர் இயற்கையின் கொடுமை, நோய், அச்சம், மூடநம்பிக்கை, அதிகார துஷ்பிரயோகம், மேல்மட்டத்தினராலும், பரந்த சமூகத்தினராலும் மறுக்கப்படல் ஆகியவற்றிலிருந்து விடுதலை அடைய விரும்புவதைக் குறிக்கும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, இத்தகைய விடுதலையை மக்களுக்கு வழங்க முற்பட்டார். உதாரணமாக சகேயுவின் வாழ்வோடு தொடர்புடைய சம்பவத்தை நோக்கும்போது பெரும்பான்மை மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டிருந்த சகேயுவிற்கு, அவனது அதிகார துஷ்பிரயோகத்திலிருந்தும், அவனை மக்கள் புறக்கணித்து வைத்திருந்த நிலைமையிலும் இருந்தும் விடுதலை கொடுப்பதனை நாம் காண்கின்றோம்

(லூக்கா 19:1-10) அவனது வாழ்வில் ஒரு புதிய நம்பிக்கையை, புதிய மாற்றத்தை இயேசு வழங்கினார். அவனது வாழ்விற்கு ஒரு முழுமையை இயேசு வழங்கினார்.

இதேபோன்று, விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசுவிடம் கொண்டுவந்த போது "உங்களில் பாவமில்லாதவன் எவனோ, அவன் முதல் கல்லை எறியட்டும்" (யோவான் 8:7) எனக் கூறினார். மனச்சான்றினால் குத்தப்பட்டவர்கள் அனைவரும் விலகிப் போனார்கள். ஆனால், இயேசு அப்பெண்ணை மன்னித்து அவளை பிடித்திருந்த அந்தப் பாவத்திலிருந்து விடுதலை கொடுத்தார். ஒரு சமயத்தலைவர், ஒரு புதிய குழுவினரின் போதகர் இவ்வாறு விலைமாதர்களோடு காணப்படுவதும், அத்தோடு சமூகத்தில் ஆண்களும் பெண்களும் சுதந்திரமாக கலந்துவிடாத ஒரு காலத்தில் இவ்வாறு இயேசு நடந்து கொள்வதும் கௌரவமில்லாத ஒரு விடயமாக இருந்தது. ஆனால் இயேசு அவற்றைப் பொருட்படுத்தாது, பெண்களுக்கு விடுதலை கொடுத்தார். விபசாரத்தில் பிடிபட்ட பெண், தனது விபசார நரக வாழ்விலிருந்து விடுதலைபெற்று தனது வாழ்வில் முழுமையைக் காண இயேசு வழிசமைத்துக் கொடுத்தார்.

இவ்வாறு இயேசு ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது சமூக நிலைமை எவ்வாறு இருந்த போதிலும், சொந்த தனிப்பட்ட மதிப்பை வலியுறுத்தினார். மக்களுடைய மதிப்பானது அதிகாரம், செல்வம், சமூகநிலை, உடல்வலிமை, அறிவுக்கூர்மை ஆகியவை பற்றி நடைமுறையிலுள்ள சமூகப் பெறுமதிகளில் தங்கியிருக்கவில்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள இயேசு துணை செய்தார்.

## இயேசுவும் சமயவிடுதலையும்

இயேசுவின் காலத்து யூதசமயமானது சமய முறைகளை சார்ந்த ஒன்றாக இருந்தது. வெளிப்புறச் சடங்குகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. சமயத்தலைவர்கள் மக்கள் மீது பொறுப்பு மிகுந்த கடப்பாடுகளைச் சுமத்துவதன் மூலம் அவர்களது வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தினர். சட்டத்தின் நோக்கத்தைவிட அதன் வாசகத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. வாழ்விற்கு முழுமையைக் கொடுக்க வேண்டிய சமய முறைமைகள் மக்களது வாழ்வினை சுமையானதாக மாற்றிவிட்டன. இத்தகைய ஒரு சூழ்நிலையில் இயேசு அக்காலத்து யூத சமயத்தை வன்மையாகக் கண்டித்தார். மனித இனத்தை மீட்பதற்காகவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். இந்த நோக்கத்திலேயே பாவத்தை உள்ளடக்கியிருந்த சமய அமைப்பு முறைகளிலிருந்து மீட்பளிக்கவேண்டிய தேவையும் அவருக்கு ஏற்பட்டது.

யூதசமயம் ஒரு சமயம் எவ்வாறு இருக்கவேண்டுமோ அதற்கு மாறானதொன்றாக ஊழல் நிறைந்ததாக இருந்தது. அது விலக்கப்பட்ட, தடுக்கப்பட்ட, கண்டிப்பான ஆசாரங்கள், சமய சடங்குகள் என்பவை சார்ந்த முறைகளிலே கட்டியெழுப்பப்பட்டிருந்தது. இத்தகைய நடைமுறையிலிருந்த சமயத்தை இயேசு கண்டித்தார். "மாயக்காரராகிய மறைநூல் அறிஞரே, பரிசேயரே உங்களுக்கு ஐயோ,............ குருடராகிய வழிகாட்டிகளே மதிகேடரே, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே" என சமயத்தலைவர்களை அவர் கண்டனம் செய்கின்றார். நற்செய்தியின் ஒரே அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இவை அனைத்தும் இயேசு சமய நிறுவனங்களுக்கு எத்தகைய அறைகூவல் விடுத்தார் என்பதனைக் காட்டுகின்றன. (மத்தேயு 23)

சமய நிறுவனங்களைக் கண்டித்த இயேசு கிறிஸ்து, தம்மைப் பின்பற்றியோருக்கு உன்னதமான ஆன்மீக வாழ்வுக்கான அழைப்புவிடுத்தார். பரிசுத்த தனம் என்பது தன்னலமற்ற அன்பாகும் (மத் 5:44-48) என விளக்கிக் காட்டினார். அவர், சமயத்தின் சாரமானது பிதாவிற்கும், ஒருவனது மனச்சான்றிற்கும் உள்ள ஆழ்ந்த உட்புறத் தொடர்பில் தங்கியுள்ளது என்று காண்பித்தார். அது தானதருமம், உபவாசம் (நோன்பு), செபம் ஆகிய வெளிப்புற எடுத்துக்காட்டுக்களில் அமைந்ததன்று. இவ்வாறான சமய வழக்க முறைகள் சமயத்தலைவர்களின் ஆணவமுள்ள தன் குற்றம் உணராத நிலைக்கு உதவின. ஆனால் இயேசு அவற்றை வன்மையாகக் கண்டித்து உண்மையான பரிசுத்ததனம், நமது செயல்களின் உட்பொருளில் தங்கியுள்ளதேயன்றி, வெறும் வெளிப்படையான உபவாசங்களிலும், தான தருமங்களிலும், செபத்திலுமன்று என இயேசு வெளிப்படுத்துகின்றார். எனவேதான் அவர் "மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும்" (மத் 5:20) எனக்கூறி புதிய சமய வாழ்க்கைக்கான அழைப்பை விடுத்து வாழ்விற்கு ஒரு முழுமையைக் காண்பிக்கின்றார்.

## இயேசுவும் சமூக விடுதலையும்

யூத சமூகத்தைப் பொறுத்தவரை தனிப்பட்டவர், சமயம், சமூகம் ஆகியவற்றுக் கிடையில் நெருக்கமான தொடர்புகள் காணப்பட்டன. யூத சமயம் தனிப்பட்டவரிலும், முழுச் சமூகத்திலும் செல்வாக்குச் செலுத்தியது. இயேசு அனைத்து வகையான கொடுமைகளிலிருந்தும் தனிமனிதனை விடுவிக்க விரும்பினார். எனவே, அதன் விளைவாக, அவர் சமூக நீதியும், சமூக விடுதலையும் மலர்வதற்கு ஆதரவாக இருந்தார். யூதசமூகத்தில் பெண்கள், நோயுற்றவர்கள், தொழுநோயாளர்கள், அடிமைகள், ஏழைகள் போன்றவர்கள் பாவிகளாக, தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கிவைக்கப்பட்டனர், புறக்கணிக்கப்பட்டனர். ஆனால் இயேசு இத்தகையவர்களுக்கு விடுதலை கொடுக்கும்வகையில் தமது திருப்பணியை மேற்கொண்டார். ஏழைகளோடும் 'பாவிகளோடும்' தம்மை அடையாளப்படுத்தினார். இதனால் 'இயேசு பாவிகளோடும் ஆயக்காரர்களோடும் உணவருந்தப் போகிறாரே' என்ற குற்றச்சாட்டுக்கு இலக்கானார். எனினும் இயேசு இவற்றைப் பொருட்படுத்தாமல் தமது பணியைச் செய்தார். தொழுநோயாளர்களுக்கு விடுதலையளித்தார். (லூக் 17:11-19) பெண்களுடைய வீட்டிற்கு சென்றார். (லூக் 10:38-42) வரிதண்டுபவர்களோடும், பாவிகளோடும் உணவருந்தினார் (மத் 9:9 - 13) இவ்விதம் இயேசு செயற்பட்டமையினால் சமூகத்தில் காணாமல் போனவர்களாக இருந்த மக்களுக்கு அவர்களுடைய வாழ்விற்கு ஒரு முழுமையைக் கொடுத்தார் எனலாம்.

## இயேசுவும் அரசியல் விடுதலையும்

நாசரேத்தூர் இயேசு அரசியலில் பங்குபற்றாத ஒருவராகவும், சமூகங்களின் அரசியற் பிரச்சினைகள் தொடர்பாக ஒரு செய்தியைக் கொண்டிராத ஒருவராகவும் நமக்கு எடுத்துக்காட்டப்படுகின்றார் என்பது பலருடைய கருத்தாகும். எனினும், இயேசு தாம் வாழ்ந்த காலத்திற்குரிய சமுதாய அரசியற் பிரச்சினைகளில் அக்கறைகொண்ட ஒரு நிலை நற்செய்தி நூல்களில் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டப்படுகிறது. இதனால், அவருடைய செய்தி முழுவதும் அரசியலைக் கொண்டது என்றோ, அதில் அவர் சிறிது

காலத்திற்கேனும் ஈடுபட்ட இருந்தார் என்றோ, அரசியல் கிளர்ச்சிக்காரராக இருந்திருக்கின்றார் என்றோ நாம் கூறமுடியாது.

இயேசு முக்கியமாக ஒரு சமயத்தலைவர், ஆன்மீகத்தலைவராக இருக்கின்றார். இதனால் அவருடைய போதனைகள் குறிப்பிட்ட ஒரு காலத்திற்கோ, இடத்திற்கோ உரிய அரசியல் முறைகளைக் காட்டிலும் மிகப்பரந்த முக்கியத்துவமுடையதாகும். அவரது செய்தி உலகளாவியது அவரது வாழ்க்கை எக்காலத்திற்கும் ஓர் எடுத்துக்காட்டு. அவர் மனித குலத்தின் அடிப்படை விடயங்களில் அக்கறை கொண்டிருந்தார். இக்கருத்தின்படி யூதர்களை அடிமைப்படுத்திய உரோமையரின் ஆளுகைக்குப் பதிலாக மற்றுமோர் அரசியல் ஆட்சியை நிறுவுவதற்கு அவர் முயலவில்லை. எனவேதான் அவர் "என்னுடைய அரசு இவ்வுலகத்திற்குரியது அல்ல" (யோவான் 18:36) என பிலாத்துவின் முன்னிலையில் கூறினார். அரசியல் துறையிலுமே நேர்மையை நிலைநாட்டுவதற்காக மக்கள் தாகம் கொள்ளும் வகையில் அவர் ஆழமான தீர்வுகளை அவர்கள் முன்வைத்தார்.

அக்காலத்திலிருந்த குடியியல், சமயம் என்பன சார்ந்த அதிகாரிகள் தமது அதிகாரத்தைச் செயற்படுத்திய முறைகளை அவர் கண்டித்தார். இயேசுவின் சமுதாயமும் அவரது இராச்சியமும் வேறுபட்டிருந்தன. (மாற்கு 10:43) வல்லந்தத்தையும் சுய நலத்தையுமன்றி அன்பையும், சேவையையும் வெளிப்படுத்துகின்ற அதிகாரத்தால் ஆளப்படுகின்ற ஒரு புதிய மனித சமுதாயத்தை உருவாக்குவதற்கான அடிப்படைகளை அவர் நிறுவி வந்தார். இதனை அவர் தம் சீடர்களின் காலடிகளைக் கழுவுகின்ற நிகழ்வின் மூலம் (யோவான் 13) தெளிவாக எடுத்துக்காட்டினார். சக்தியும் அதிகாரமும் உண்மையான சேவையாக, துலக்கமானவையாக, அர்த்தமுள்ளவையாக இருக்கவேண்டுமேயன்றி சுயநலந்தேடுபவையாக, தங்களை நிலைநிறுத்திக் கொள்பவையாக இருக்கக்கூடாது. இவையனைத்திலும் இயேசு அக்காலத்திலிருந்த அரசியல் அமைப்புக்களையும் ஆட்சியாளர்களையும் எதிர்த்துப் போராடினார். இதன்மூலம், அடிமைப்பட்டுக்கிடக்கும் மக்களுக்காக அவர் சேவைசெய்தார். அதுமட்டுமன்றி இதன்மூலமே மக்களின் வாழ்க்கைக்கு ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கின்றார் எனலாம்.

## இயேசுவும் பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலையும்

இயேசுகிறிஸ்து பாவிகளை மீட்டு இரட்சிக்கவே இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டார். அவர் தமது வாழ்வில், திருப்பணியில் பாவத்திலிருந்து விடுதலை கொடுக்கும் பணிக்கு முக்கியத்துவம் கொடுத்தார். குறிப்பாக, தன்னிடம் வந்த நோயாளர்களுக்கு நோயிலிருந்து விடுதலை கொடுத்தபோது அவர்களது நோய்க்கு காரணம் என யூதர்கள் சிந்தித்த பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கொடுத்தார் (மாற்கு 2) "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" எனக்கூறினார். இதைவிடக் கேடானது எதுவும் நிகழாதிருக்க இனிப் பாவம் செய்யாதே எனக்கூறினார். இவ்விதம் நோக்கும்போது இயேசு பாவ அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை கொடுப்பதனை நாம் காணமுடிகிறது.

## முடிவுரை

இயேசுக்கிறிஸ்துவின் திருப்பணியை நாம் ஒட்டுமொத்தமாக நோக்குகின்றபோது அவர், சமுதாயத்தில் மனித அபிலாசைகளை நிறைவேற்றுவது தொடர்பாக கொண்டிருந்த ஈடுபாட்டினை காணமுடிகிறது. தமது பணி வாழ்வில் முழுமனிதவிடுதலையைக் கொடுக்கவந்தேன் என அறிவித்த அவர் அதனை நிறைவாகச் செய்து முடித்தார். "ஆடுகள் வாழ்வுபெறவும், அவற்றிற்காக உயிரைக் கொடுக்கவும் வந்தேன்" எனக்கூறிய அவர் தமது பாடுகள், மரணம் என்பவற்றினூடாக தமது மக்களுக்காக உயிரைக் கொடுத்தார். அவற்றிற்கு வாழ்வளிப்பதற்காக உயிர்த்தெழுந்தார். இவ்விதம் செய்தமையினால் வாழ்வின் முழுமையை அவர் எமக்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

## துணை நூற்பட்டியல்


**பாலசூரிய, திஸ்ஸ (1978).** “இயேசுக் கிறிஸ்துவும் மானிட விடுதலையும்”, விடுதலை வெளியீடுகள், இல 7 சமய சமூக நடுநிலையம், 281, டீன்ஸ் வழி, கொழும்பு 10.

**இராபின்சன், ஞான (1971).** திருமறைத் தோழன், கிறிஸ்தவ இறையியல் நூலோர் குழு, அரசடி, மதுரை.

**தியாகு (1995).** விவிலியக் களஞ்சியம் II: விவிலிய அறிமுகம், தியான ஆசிரமம், சென்னை - 28.